
# குடும்பத்திற்கு வரவேற்பு



கிறிஸ்தவ புது விசுவாசிகளுக்கு
ஒரு துணை நூல்

பில் நியூமன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது தீர்மானம்

இன்று நான் எனது வாழ்வை

இயேசு கிறிஸ்துவுக்கு

அர்ப்பணித்து அவர் குடும்பத்தில் ஒருவனானேன்

______________________________

திகதி

______________________________

கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்பத்திற்கு வரவேற்பு

## கிறிஸ்தவ புது விசுவாசிகளுக்கு

## ஒரு துணை நூல்

பில் நியூமன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டுகள்



கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவில் உங்கள் வாழ்க்கையை ஒப்புக்கொடுத்தீர்களானால் அதுவே உங்கள் வாழ்வில் நீங்கள் செய்த மிக பெரிய காரியமாகும்.

கிறிஸ்தவ ஜீவியத்தின் அடிப்படை இயேசு கிறிஸ்துவின் வல்லமையில் தங்கியுள்ளதால் அது ஒரு வித்தியாசமான ஜீவியமாக தோன்றுகிறது.
நீங்கள் கிறிஸ்தவ வாழ்வில் முன்னேர சில குறிப்புகளை நான் உங்கள் முன் வைக்க விரும்புகிறேன்.

* தினமும் வேதத்தை வாசியுங்கள். அது உங்கள் ஆவிக்குரிய உணவு
* ஜெபத்தின் முக்கியத்தை தவறவிடாதீர்கள்.
* எமது நாளாந்த வாழ்க்கையில் வேதம் வழிநடத்துகிறது என்று அறிந்து கொள்ளல் அவசியம்.
* இயேசுவை குறித்து மற்றவர்களுக்கு சாட்சி கூறல்.

இவற்றிற்கூடாக நீங்கள் ஒரு கிறிஸ்தவன் செய்ய வேண்டிய பல காரியங்களை செய்ய முடியும்.

தேவனின் குடும்பத்தில் ஒரு அங்கத்தவராக இருப்பதே ஒருவரின் மிக பெரிய பாக்கியம் என வேதம் கூறுவதை அவதானியுங்கள்.

"அவருடைய நாமத்தின் மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனை பேர்களோ அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாக்கும்படி அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார்."

(யோவான் 1 : 12)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறவன் அவர் கைகளில் தன்னை அர்ப்பணிக்கிறான். பாவத்தை அறிக்கையிட்டு இயேசுவை ஏற்று அவரை பின்பற்றுகிறவன் ஒரு கிறிஸ்தவனாகிறான்.
பாவத்தை அறிக்கை செய்து அதை விட்டு விலகி நடக்கவும் அவசியம். ஒரு கிறிஸ்தவனின் வாழ்வில் இயேசு கிறிஸ்து ஆட்சி புரிகிறார். கிறிஸ்தவன் அனைவருக்கு சாட்சி பகிர்ந்து இயேசுவிற்கு கீழ்ப்படிந்து வேதத்தை தன் வழிகாட்டியாக ஏற்று கொள்ள வேண்டும். புதிய கிறிஸ்தவ விசுவாசி ஒரு சிறு பாலகனைப் போல தென்படுகிறான்.

பாலகனுக்கு வாழ்க்கையை குறித்து புரியாதது போல் புதிய கிறிஸ்தவனும் விளக்கம் புரியாமல் இருக்கிறான். நீங்கள் இயேசுவுக்காக எடுத்து இருக்கும் தீர்மானம் நிரந்தரமா? அல்லது அகன்று விடுமா? தேவன் கூறுவதை கேளுங்கள் "......... நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை உன்னை கைவிடுவதுமில்லை." எபிரேயர் 13 : 5 இயேசு இத் தீர்மானத்தை எடுக்க எங்களுக்கு உதவினார். அது போல உங்கள் வாழ்க்கையை அவருக்காக வாழ உதவி புரிவார். சபையில் மற்ற கிறிஸ்தவர்களோடு சேர்ந்து ஒன்றாகி இருங்கள். இது உங்கள் ஆத்தும வளர்ச்சிக்கு அவசியம்.

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

*பில் நியூமன்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுவிசேஷத்தின் அடிப்படை சத்தியங்கள்

**தேவ திட்டம்** - உங்களுக்கு பாவ நிவாரனம் அளித்து நித்திய ஜீவனை உங்களுக்கு கொடுக்க முன் வருகிறார்.


நாம் தேவனின் 10 கற்பனைகளை கை கொள்ளவில்லை. அதனால் நாம் தண்டனைக் குள்ளானோம். ஆனால் தேவன் எம்மை மன்னித்து நித்திய வாழ்வை கொடுக்க முன் வருகிறார். “தேவன் தம்முடைய ஒரே பேரான குமாரனை விசுவாக்கிறவன் எவனோ அவன் கெட்டு போகாமல் நித்திய ஜீவனை அடையும் படிக்கு அவரை தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்.”

யோவான் 3 : 16

## மனித வர்க்கத்தின் பிரச்சனை - பிரிவு

மனிதன் தன் சுபாவத்தினால் தேவனை பிரிந்து வாழ்கிறான். அதனால் அவனுக்கு சுயமாக அவரோடு நிம்மதி இருக்க முடியாது. எல்லாரும் பாவம் செய்து தேவ மகிமையற்றவர்களாகினார்கள். (ரோமர் 3 : 23)

ரோமர் 6 : 23 “பாவத்தின் சம்பளம் மரணம். தேவனுடைய கிருபையையோ தம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன்.”




**தேவனிடமிருந்து பிரிதல்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேவனின் பரிகாரம் - சிலுவை**

தேவ அன்பு பிரிவினையை அகற்றி அவரோடு ஒன்றாய் இணைக்கிறது. இயேசு சிலுவையில் மரித்து மரித்தோரிலிருந்து உயிர்த்த போது இதை செய்தார்.

இயேசு "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன் என்னாலேயல்லமால் ஒருவனும் பிதாவினிடத்தில் வாரன்."

(யோவான் 14 : 6)




**மரணத்திலிருந்து ஜீவனுக்கு கடந்து செல்லுதல்**

**நாம் இதற்கு பதில் கூறுவது - இயேசுவை ஏற்றுக்கொள்ளல்**

இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பதன் மூலம் நாம் மரணத்தை கடந்து செல்லுகிறோம். இயேசு என் பாவ தண்டனையை சிலுவையில் ஏற்றார் என்று நம்பி அவரை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ள வேண்டும். அவரின் (இயேசு கிறிஸ்துவின்) நாமத்தின் மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனை பேர்களோ அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்.

(யோவான் 1 : 12)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முன் வாருங்கள்**

பாவ அறிக்கை செய்யுங்கள். இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ளுங்கள். அவரை பின் தொடருங்கள் அவருக்கு கீழ்ப்படியுங்கள்.

**ஒரு நித்திய வாழ்வை அடைவதற்கு ஜெபிப்பதெப்படி?**

“ஆண்டவரே நான் பாவி என்பதை அறிவேன. இப்போதே நான் பாவ அறிக்கை செய்து இயேசு என் பாவத்திற்காக மரித்தாரென்றும் மீண்டும் உயிர்த்தெழுந்தாரென்றும், இன்றும் என்றும் ஜீவிக்கிறாரென்றும், நம்புகிறேன். என் இருதயத்தை திறந்து இயேசுவை என் வாழ்வில் ஏற்கிறேன். அவருக்கே சேவை செய்ய விரும்புகிறேன். இதற்காக ஆண்டவருக்கு நன்றி, ஆமென்.”

.....................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. கிறிஸ்துவுக்குள் புதிய பிறப்பு

நீங்கள் கிறிஸ்தவனாக முதன் முறையாக இயேசுவை ஏற்று கொள்ளும் போது தேவனின் ஒரு குடும்ப அங்கத்தவராகிறீர்கள். இயற்கையாக நாம் எமது சொந்த குடும்பத்தில் ஒருவராக இருக்கிறோம். அதே போல் ஒரு சொந்த குடும்பத்தில் வினோதமான ஒரு மறு பிறப்பை அடைகிறான். இயேசுவை ஏற்கும் ஒருவனுக்கு புதிய ஜீவியம் காத்திருக்கிறது.

அவருடைய நாமத்தின் மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்று கொண்டவர்கள் எத்தனை பேர்களோ அத்தனை பேருக்கும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார்.

(யோவான் 1 : 12)

## இப் புதிய வாழ்விற்கு அப்பாற்பட்டவைகள்

புதிய விசுவாசம், புதிய வழிமுறைகள், புதிய பழக்கவழக்கங்கள் என்பவைகளை பின்பற்றுவன் ஒரு கிறிஸ்தவனாவான் என்று கூறமுடியாது. ஒரு கிறிஸ்தவனின் செயற்பாடு, நடத்தை முதலியன இயேசு கிறிஸ்துவினால் மாற்றப்படும் என்பது உண்மை இயேசுவை தேர்ந்து அவருடன் தொடர்பு கொண்டு ஜீவிப்பதினால் தேவனுடைய பிள்கைள் என கருதப்படுவீர்கள். (கலாத்தியர் 3 : 26) இயேசுவை அடைய மறுபிறப்பு மிக அவசியம். "ஒருவன் மறுபடியும் பிறக்காவிட்டால் தேவனுடைய இராஜ்யத்தை காணமாட்டான் என்று மெய்யாகவே! மெய்யாகவே! சொல்லுகிறேன்" என்றார் இயேசு. (யோவான் 3 : 3)

ஒரு புதிய விசுவாசி தேவ விசுவாத்தில் வளர்ச்சி அடைய வேண்டும். ஒரு புதிய பிறப்பு, ஒரு புதிய தகப்பன், புதிய குடும்பம் உங்களை தேவனின் புத்திரனாக்குகிறது. ஆனால் நீங்கள் இக் குடும்பத்தில் ஒரு சிறு பாலகனாக பிறந்திருக்கிறீர்கள். இது உங்கள் வாழ்க்கையில் ஒரு புதிய அம்சம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திடமாக நம்புதல்**

சாத்தானின் பல தீய செயல்களும் அவன் உங்களுக்கெதிராக செய்யும் போராட்டத்திற்கெதிராகவும் உங்களை வீழ்த்தாமல் நீங்கள் பெலனடையவும் பாதுகாப்பாய் இருக்க சில அரிய உண்மைகளை கூற விரும்புகிறேன்.

**(1) அவ்விசுவாசத்தை நீக்கி அதற்குப்பதிலாக தேவ வசனத்தில் உள்ள வாக்குத்தத்தங்களை நினைவு கூறுங்கள்.**

நீங்கள் கிறிஸ்துவுக்குள் விசுவாசியானதும் உங்கள் பிரச்சனைகள் தீர்ந்துவிடாது சில சமயம் புதிய பிரச்சனைகள் தோன்றலாம். தேவன் உங்களில் செய்யும் மகிமையான காரியங்களை அகற்றிவிட சாத்தான் எத்தனிப்பான் இதனால் நீங்கள் அநவம்பிக்கையினால் கலவரம் அடைவீர்கள். சாத்தான் எப்போதும் முதலில் உங்கள் இருதயத்தில் தேவன் செய்த மாற்றத்தைக் குறித்து உங்கள் எண்ணத்தை மாற்றுவான்.

“நீ உண்மையாகவே இயேசுவை விசுவாசத்தினால் பாவமன்னிப்பு பெற்ற இரட்சிப்படைந்திருக்க மாட்டாய்” என்று உரதத் குரலில் அல்ல மெதுவாக உங்கள் இதயத்தில் கூறக்கூடும்.

இதற்கு உங்கள் பதில் என்ன? இதன் பதில் வேதாகமத்தில்

1 யோவான் 5 : 11 - 13 இல் உள்ளது. அதை முடியுமானால் மனப்பாடம் செய்யுங்கள்.

நாம் கிறிஸ்துவில் தங்கியுள்ளோம் என்ற திட நம்பிக்கை எமக்கு வேண்டும். நாம் செய்யும் நன்மைகள் எமது திறமைகள் இவற்றினடாக எமக்கு பரலோகம் செல்ல முடியாது. இயேசுவிடம் எம்மை நாம் அர்ப்பணித்தால் மட்டுமே எமக்கு பரலோகத்தில் நித்திய ஜீவனுண்டு.

நீங்கள் முதன் முதலில் இயேசுவை இராட்சகராக ஏற்ற போது உங்கள் பாவம் மன்னிக்கப்பட்டது. சுத்த இருதயத்தோடு ஒரு உணர்வை பெற்றிருப்பீர்கள். ஆனால் உங்கள் உணர்ச்சிகளில் நீங்கள் தங்கியிருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழைய ஏற்பாட்டில் நோவாவின் உணர்வுகள் அவனை வெள்ளத்திலிருந்து காக்கவில்லை. அவன் தன் குடும்பத்தோடு தன் ஜீவியத்தை விசுவாசத்தோடு அந்த பேழைக்குள் பிரவேசித்து அதை நம்பினான். அதே போல நாம் எம் ஜீவியத்தை இயேசுவிடம் ஒப்பு கொடுத்தால் தேவனின் குடும்பத்தில் ஒரு அங்கத்தவராகி நித்திய ஜீவனை பெறுவோம் என்று வேதம் கூறுகிறது.

பரிசுத்த பவுல் இவ்வாறு கூறுகிறார். "அதனிமித்தம் நான் இந்த பாடுகளையும் அனுபவிக்கிறேன். ஆயினும் நான் வெட்கப்படுகிறதில்லை, ஏனென்றால் நான் விசுவாசிக்கிறவர் இன்னார் என்று அறிவேன். நான் அவரிடத்தில் ஒப்பு கொடுத்ததை அவர் அந்நாள் வரைக்கும் காத்துக் கொள்ள வள்ளவராயிருக்கிறாரென்று நிச்சயத்திருக்கிறேன்.

(2 தீமோத்தேயு 1 : 12)

**நாம் சாத்தானுடன் போரிடுகிறபடியால் அவ்விசுவாசம் உங்களை கலக்கும் போது தேவ வாக்குகளை நினைவு கூறுங்கள்.**

தெளிந்த புத்தியுள்ளவர்களாய் இருங்கள். விழித்திருங்கள் ஏனெனில் உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கத்தை போல எவனை விழுங்கலாமோ என்று வகை தேடி சுற்றிதிரிகிறான்.

"விசுவாசத்தில் உறுதியாயிருந்து அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள். உலகத்திலுள்ள உங்கள் சகோதரரிடத்திலே அப்படிப்பட்ட பாடுகள் நிறை வேறி வருகிறதென்று அறிந்திருக்கிறீர்களே"

(1 பேதுரு 5: 8, 9)

**கிறிஸ்துவின் அடையாளம் சிலுவை பஞ்சு தலையனையல்ல!**

**(2) சக விசுவாசிகளுடன் எப்போதும் ஒன்று கூடி சந்தியுங்கள்**

ஒரு நிலக்கரி நெருப்பினின்று அகற்றி விட்டால் அனைந்து விடும், மற்ற விசுவாசிகளை சந்திப்பது மிக அவசியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்." (அப்போஸ்தலர் 2 : 42)

"மேலும் அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் நாம் ஏவப்படும்படி ஒருவரையொருவர் கலனித்து ; சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறது போல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் எவ்வளவாய் பார்க்கிறீர்களோ அவ்வளவாய் புத்தி சொல்லவேண்டும்.
(எபிரேயர் 10 : 24 , 25)

**(3) எமது சக்தியில் அல்ல தேவ வல்லமையில் தங்கியிருத்தல் அவசியம்**

"என்னை பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலனுண்டு." (பிலிப்பியர் 4 : 13)

"நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை உன்னை கைவிடுவதுமில்லை." என்று (தேவன்) சொல்லியிருக்கிறாரே. அதனாலே நாம் தைரியங் கொண்டு கர்த்தர் எனக்கு சகாயர் நான் பயப்படேன் மனுஷன் எனக்கு என்ன செய்வான் என்று சொல்லலாமே. (எபிரேயர் 13 : 5 , 6)

## ஒரு புதிய திருப்பம் - நான் மன்னிப்பைப் பெற்றேன்.

ஒரு சிறு பாலகன் நடக்க முயற்சிக்கும் போது விழுகிறான். அதே போல தான் எமது கிறிஸ்தவ ஜீவியம்.

நல்ல மனுஷருடைய நாட்கள் கர்த்தரால் உறுதிப்படும். அவனுடைய வழியின் மேல் அவர் பிரியமாயிருக்கிறார். அவன் விழுந்தாலும் தள்ளுண்டு (போவதில்லை. கர்த்தர் தமது கையினால் அவனை தாங்குகிறார்.)
(சங்கீதம் 37 : 23 , 24)

சாத்தான் எமது வீழ்ச்சியை எப்போதும் பார்த்து மகிழ்கிறான். இதற்கான பல சந்தர்ப்பங்களை கொடுத்து எம்மை கலங்கச் செய்வான். நாம் பாவம் செய்தால் உடனே தேவனிடம் மன்னிப்பை பெற வேண்டும். சாத்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கு பல நேரங்களில் இடமளிப்பதில்லை. நீங்கள் சிறு பாலகனாக இருந்தபோது நடக்க தொடங்கினீர்கள். அப்போது பல முறை விழுந்திருப்பீர்கள். ஆனால் உங்கள் அப்பாவோ, அம்மாவோ உங்களை தூக்கி மீண்டும் நடக்கச் செய்வார்கள்.

இதே போல் நாம் எமது கிறிஸ்தவ வாழ்க்கையை ஜீவிக்க வேண்டும். நாம் பாவத்தில் விழுந்தால் ஜெபத்தின் மூலம் தேவனிடம் செல்லலாம். அவர் அந்நேரம் நிச்சயம் கை கொடுத்து உதவுவார்.

1 யோவான் 1 : 9 ஐ மனனம் செய்யுங்கள். நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால் பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மை சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியுள்ளவராயிருக்கிறார்.

சாத்தான் எம்மை வீழ்த்த முயற்சித்தாலும் இயேசு எமக்கு தன் வல்லமை மூலம் வெற்றியை தருவார்.

மனப்பாடமாக்கவும் . 1 கொரிந்தியர் 10 : 13

மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார். உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுவதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக சோதனையோடு கூட அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்.

அவ்வாக்கியங்களை உங்கள் வேதாகமத்தில் குறித்துக் கொள்ளுங்கள்.

.......................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2. உங்கள் புதிய எஜமான்

இயேசு கிறிஸ்து உங்கள் புதிய கிறிஸ்தவ வாழ்வில் புரியும் செயற்பாடுகளை அவரின் தன்மைகளை பற்றி நாம் இந்த அத்தியாயத்தில் கற்றுக் கொள்ள போவதால் இந்த பகுதி மிக முக்கியமானதாக இருக்கிறது. நீங்கள் இயேசு கிறிஸ்துவில் வைத்திருக்கும் புதிய நம்பிக்கையை பலப்படுத்தி வளர செய்ய தேவன் முன் வருகிறார். இயேசு கிறிஸ்துவை போல நாம் ஆகுவோமானால் அதுவே கிறிஸ்தவ ஜீவியத்தின் அறிகுறி.

இவ்வுலகில் பல சோதனைகள், பல கடற்படைகள், பல பாராளு மன்றங்கள், பல இராஜாக்கள் வீர செயல்களை புரிந்தனர். ஆனால் இவையெல்லாம் ஒன்று கூடியும் இயேசுவை போல் மனிதனின் வாழ்விற்கு பலன் தரவில்லை.

**கர்த்தராகிய இயேசுவை அறிந்து கொள்ளுதல்.**

நீங்கள் இயேசுவை இப்போது நம்பி அவரை சொந்த இரட்சகராக ஏற்றிருக்கிறீர்கள். அடுத்து அவரை அறிந்து கொள்ளுவதில் நாட்டம் காட்டுவீர்கள். ஒருவரை எவ்வளவுக்கதிகமாய் அறிந்து கொள்ளுகிறோமோ அவ்வளவுக்கு அவரில் நம்பிக்கை வைப்போம் அல்லவா?

பவுல் அப்போஸ்தலர் இயேசு நன்கு அறிய மிக விருப்பம் கொண்டார். (பிலிப்பியர் 3 : 10) இயேசுவை பற்றி அறிய நாம் தேவனாகிய பரிசுத்தாவியானவரின் உதவியை நாட வேண்டும். ஒரு சரித்திர சம்பந்தமான ஒரு நபரைப் பற்றியல்ல எம்மோடு எப்போதும் ஜீவிக்கிற வல்லமையான ஒருவரைப் பற்றி அறிய காத்திருக்கிறீர்கள்.

**இயேசுவின் தெய்வீக தன்மை**

வாசியுங்கள் யோவான் 1 : 1 – 3, மத்தேயு 1 : 18, 20, 21

கிறிஸ்தவம் மற்ற மதங்களைப் போல ஒரு சமயமல்ல தேவ குமாரன் ஒரு ஆண் அல்லது பெண்ணின் ஜீவியத்தில் செயலாற்றும் வல்லமையே கிறிஸ்தவம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயேசு கிறிஸ்தவும் கிறிஸ்தவ மதமும் ஒன்றானதே இயேசு கிறிஸ்து வேதத்தின் புதிய ஏற்பாட்டின் மூலகாரணராயும் பழைய ஏற்பாட்டு வாக்குத்தத்தங்களை நிறைவேற்றியவராகவும் திகழ்கிறார். அவர் பிறப்பிலிருந்து மீண்டுமாக அவர் இராஜாதி இராஜாவாக 2ம் வருகை வரை சகல வாக்குகளும் நிறைவேறும்.

**இயேசு கிறிஸ்துவின் மானிடத்தன்மை**

இயேசு மானிட பெற்றேரை கொண்டவர். (மத்தேயு 2 : 11)

1. இயற்கையான மனித வளர்ச்சியை அவர் ஏற்றார். (லூக்கா2:52)

2. மனிதனுக்கு ஏற்படும் சகல பிரச்சனைகளையும் சகித்தார்.

| | | |
|---|---|---|
| - | பசியாயிருந்தார் | மத்தேயு 4 : 2 |
| - | தாகமாயிருந்தார் | யோவான் 19 : 28 |
| - | களைப்படைந்தார் | யோவான் 4 : 6 |
| - | அழுதார் | யோவான் 11 : 35 |
| - | சோதனைக்குட்பட்டார் | எபிரேயர் 4 : 15 |

இயேசு முழு மனிதனாயிருந்த போதிலும் அதற்கு மேலாக திகழ்ந்தார்.

அவர் தேவனும், மனிதனாகவும் இருக்கவில்லை. அவர் மானிட ரூபத்தில் தேவ குமாரனாக இருந்தார்.

இயேசு பெண்ணின் மூலம் பிறந்தார். இதனால் தேவன் மனிதனானார். அதனால் அவர் ஒரே தன்மை உடையவராயிருந்தார்.

(ஏசாயா 7 : 14 , ஏசாயா 9 : 6 - 7 , மீக்கா 5 : 2)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இயேசு கிறிஸ்துவின் மரணம்**

இயேசுவின் மரணத்தைக் குறித்து புதிய ஏற்பாட்டில் தீர்க்கதரிசிகள் இதை குறித்து முன்னறிவித்தனர்.
இயேசுவின் மரணத்தை குறித்து புதிய ஏற்பாட்டில் 120 முறை குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதைவிட பழைய ஏற்பாட்டில் தீர்க்கதரிசிகள் இதை குறித்து முன்னறிவித்தனர்.

1. இயேசு எமக்காக சிலுவை மரணத்தை ஏற்றார். (2 கொரிந்தியர் 5: 21) பாவமற்றகிறிஸ்து பாவிகளுக்காக மரித்து தண்டனையை ஏற்றார். இதை விசுவாசித்தவனுக்க தேவன் தன்னுடைய வல்லமையினால் அவனை பாவமற்றவனாக்குகிறார்.

2. இயேசுவின் மரணத்தை குறித்த தேவன் முன்னேயே யோசித்து செயல்பட்டார். (வெளி 13 : 8)

3. இயேசு சுயமாகவே மரணத்தை ஏற்றார். (யோவான் 10 : 17 – 18) "ஒருவனும் அதை என்னிடம் இருந்து எடுத்து கொள்ளமாட்டான்: நானே அதை கொடுக்கிறேன். மறுபடியும் எடுத்து கொள்ளவும் எனக்கு அதிகாரம் உண்டு" என்றார் இயேசு.

**இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல்.**

வாசிப்பு – மத்தேயு 28 : 5, 6 எட்வேட் கிலாக் எழுதுகிறார். சட்டத்தரணியாகிய நான் இயேசுவின் உயிர்தெழுதலைப்பற்றி பல சாட்சிகளை ஆராய்ந்துள்ளேன். நீதி மன்றத்தில் சில உண்மைகள் , தீர்ப்புகள் அவ்வளவாக திருப்தியடைவதில்லை. ஆனால் இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குரிய சாட்சிகள் உண்மையானவை என்று பல மனிதர்கள் கூறியதை நான் நம்புகிறேன்

"நானே உயிர்த்தெழுதலும் , ஜீவனுமாயிருக்கிறேன்" என்றார் இயேசு. (யோவான் 11 : 25) இயேசுவில் உயிர்த்தெழுதல் சீஷருக்கு ஒரு தத்துவமாகவும் , விசுவாசிகளுக்கு நம்பிக்கையூட்டுவதாகவும் இருந்த சாட்சியாய் மரித்தவர்களுக்கு வல்லமையையும் கொடுத்தது. இது வல்லமையான பிரசங்கத்திற்கு அடிப்படை நோக்கமாகவும் இருக்கிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இயேசுவின் பரமேறுதல் இரண்டாம் வருகை**

வாசிப்பு – அப்போஸ்தலர் 1 : 9 – 11

நாற்பது நாட்கள் சீஷரோடு சம்பாஷித்து விட்டு இயேசு பரமேறி இன்று தேவனின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார். (எபிரெயர் 10 : 12)

இயேசுவின் இரண்டாம் வருகை புதிய ஏற்பாட்டில் 300 தரம் கூறப்பட்டுள்ள ஒரு முக்கிய விடயம்.
(1 தெசலோனிக்கேயர் 4 : 16, 17)

"இயேசு இவ்வுலகில் நடந்தார். அவர் காலடிகள் ஒரு போதும் அழிந்துவிடாது. இவ்வடிகள் ஒரு தேவதூதனுடையதல்ல ஒரு உடலில்லா, ஒரு கற்பனையல்ல ஆனால் திட்டவட்டமாக **(இயேசு என்ற மனிதனுடையது.** (பீட்டர் பனர்)

வேதம் இயேசுவைப் பற்றி கூறுவதை மட்டும் விசுவாசித்தால் போதாது இயேசுவை நாம் சுயமாய் ஏற்று நித்திய வாழ்வை பெற வேண்டும். நற்காரியங்களை செய்து சமய கோட்பாடுகளை செய்து நித்திய ஜீவனை அடைய முடியாது. இயேசு ஒருவரே பாவ நிவாரணத்தை அளித்து நித்திய வாழ்வை தருகிறார்.

...................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3. உங்கள் புதிய குடும்பம்

இவ்வாறு (ரோபட் பீ மங்கள்) கூறுகிறார். ஒருவருடைய தகைமை குறைவை பாராமல் தன்னோடு இணைத்துக் கொண்டு அங்கத்துவம் கொடுப்பது உலகிலேயே கிறிஸ்தவ சபையொன்றுதான்.

பரலோகம் செல்லும் பாதையில் நீங்களும், தேவனும் இருவர் சேர்ந்து பயணம் செய்யும் துவிச்சக்கரவண்டியல்ல. நீங்கள் மற்றும் சகவிசுவாசிகளுடன் ஒன்று சேர்ந்து செல்லுவதே பரலோக வழி.....
மாற்கு சுவிசேஷத்தில் இயேசு மலையில் ஏறி பன்னிருவரை தனக்கென்று தேர்ந்தார். அவர்களை சுவிசேஷத்தை பரப்புவதற்கு உலகில் அனுப்பவே இதை செய்தார். (மாற்கு 3:13,14) இப் பன்னிரண்டு பேரும் வித்தியாசமானவர்கள். ஒருவரையொருவர் தாமே தேர்ந்தெடுக்க மாட்டார்கள். யோவான் இடிமுழக்க மகனாக இருந்தான். பேதுரு எப்போதும் முன்னேயே செயல்படுகிறவனாக திகழ்கிறான். மத்தேயு ரோம அதிகாரிகளுக்கு வரிவசூலிப்பவனாக இருந்தான். சீமோன் ரோமறை எதிர்த்து போராடிய "சீலட்" என்ற குழுவை சேர்ந்தவன் சீமோன் இயேசு ஜீவித்த காலத்திற்கு முன் இருந்திருந்தால் மத்தேயுவை துரோகி என்று கொலை செய்திருப்பான். ஆனால் இயேசு இவர்களை அழைத்த போது பன்னிருவரும் ஒருவரையொருவர் ஏற்றுக் கொண்டனர்.

**தேவனின் ஜனங்கள்**

தேவன் உங்களையும், என்னையும் தன்னிடம் சேர்த்து கொள்ளும் கதையை மட்டும் வேதாகமம் கூறவில்லை. தேவன் தனக்கென்று ஒரு ஜனத்தை எழுப்ப முன் வந்தார். மனித வர்க்கத்தினிடையே உள்ள பிரிவினைகளை அகற்றி, ஒரு குடும்பமாக முன் வருகிறார். பழைய ஏற்பாட்டில் ஒரு மனிதனின் வீர தீர செயல்கள் சொல்லப்படவில்லை.

தேவன் தன் திட்டத்தினும் இம் மனிதர் செயல்பட பயிற்சி அளித்தார். தேவன் ஆபிரகாமிடம் " நான் உன்னை பெரிய ஜாதியாக்கி , உன்னை ஆசீர்வதித்து ....... பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்கு ஆசீர்வதிக்கப்படும் என்றார். (ஆதியாகமம் 12 : 2, 3) தேவன் யூதரை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருக்கு மட்டும் சொந்தம் என எண்ணி அவர்களை தேர்ந்தெடுக்கவில்லை. ஆபிரகாமும் , இஸ்ரவேரலும் மற்ற ஜாதிகளுக்கு ஆசீர்வாதத்தை கொண்டு வர வேண்டும் என விரும்பினார்.

பழைய ஏற்பாட்டு கதைகள் மிக தோல்விகளையுடையது. இஸ்ரவேலரை தேவன் ஆசீர்வதித்தார். ஆனால் அவர்கள் தேவனை மறந்து தம் வழியில் சென்று பாவத்திற்குள்ளானார்கள். தாங்கள் தேவனின் உடைமைகள் என்று இஸ்ரவேலா் நினைத்துக் கொண்டு தமக்கு வேண்டியதை செய்தனா். தேவன் அவா்களை நியாயம் விசாரித்தாா். மிக சில இஸ்ரவேலரே உண்மையுள்ளவா்களாக இருந்தனா். இயேசு பன்னிரண்டு பேரை இவரின் சேவைக்காக அழைத்தாா். இப் பன்னிரண்டு பேரும் இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களுக்கு ஒப்பாவாா்கள். கடைசியில் அவா்களும் கூட இயேசுவை கைவிட்டனா். மனித வா்க்கத்தின் ஒரே உண்மையான நம்பிக்கையான நபராக இயேசு சிலுவை மரணத்தை ஏற்றாா். அவா் ஒருவரே எம் பாவங்களை சுமந்தாா். தேவன் ஆபிரகாமிற்கு கொடுத்த ஆசீா்வாதங்களை இயேசு சிலுவையில் பூரணமாக்கினாா். தேவ ஜனங்கள் மீண்டும் உலகில் பெருகினார்கள. இயேசுவின் உயிா்த்தெழுதலுக்கு பின் சீஷா் தைரியம் கொண்டனா். பெந்தேகோஸ்தே நாளில் மூவாயிரம் போ் விசுவாசிகளானாா்கள். இன்று கோடி கணக்கான கிறிஸ்தவா்கள் உலகில் இருக்கிறாா்கள். வேதாகமத்தில் கடைசி புத்தகமான வெளிப்படுத்தின சுவிசேஷத்தில் எண்ண முடியாத அளவு தேவ ஜனங்கள் பற்றி கூறப்படுகிறது.

தேவ திட்டத்தை இப்போது அறிந்து கொண்டீர்களா? நீங்கள் விசுவாசியாகி அவரின் குடும்பத்தில் ஒருவராகி எண்ணிக்கையற்ற பெரும் தொகை விசுவாசிகளுடன் ஒரு மனப்பட்டு உலகத்தை ஆசீா்வதிப்பதே தேவ திட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலர் நான் விசுவாசியாவேன் ஆனால், ஆலயத்தில் சேரமாட்டேன் என்பார்கள். கப்பற்படையில் சேர்ந்த ஒருவன் கப்பலில் ஏறமாட்டேன் என்பது போலாகும். எமது கிறிஸ்தவ வளர்ச்சிக்கு ஆலயம் முக்கியம்.

**திருச்சபையை தேர்தல்.**

கிறிஸ்துவை ஏற்று விசுவாசித்த நீங்கள் உண்மையான திருச்சபையில் சேர்ந்திருப்பது மட்டுமல்லாமல் உங்கள் பெயர் பரலோகத்தில் ஜீவ புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது. ஆனால் இவ்வுலகில் வாழும் போது ஒரு திருச்சபையை தேர்ந்து அங்கே செல்வது அவசியம். சாதி , பேதமின்றி விசுவாசிகள் ஒன்று கூடுவதே திருச்சபை உலகத்தில் பல விசுவாசிகள் திருச்சபையை சேர்ந்திருக்கிறார்கள் ஆனால் அவர்கள் எல்லாரும் ஒரே நேரத்தில் ஒரு இடத்தில் சேரவில்லை. அருகருகே வாழும் விசுவாசிகள் ஒன்றுகூடி ஒரு திருச்சபையில் ஆராதனை நடத்தலாம். முன்னைய காலங்களில் கிறிஸ்தவர்கள் தம் வீடுகளிலும் கூடினார்கள்.

(ரோமர் 16 : 5, பிலேமோன் 2)

**ஒரு விசுவாசி சரியான தனக்கேற்ற சபையை தேர்வது எப்படி?**

1. இதை குறித்து ஜெபியுங்கள். தேவன் உங்களுக்கேற்ற சபையில் சேர வழிநடத்துவார்.

2. முழு வேதாகமத்தையும் உண்மையாக கைக்கொள்ளும் விசுவாசிகளோடு சேர்தல் அவசியம்.

   2 தீமோத்தேயு 3:16

3. இயேசுவை குறித்த சத்தியத்தை போதிக்கிற விசுவாசிகளுடன் சேருங்கள்.

   கொலோசேயர் 2 : 9

4. எமது நற்கிரியைகள் அல்ல இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பதன் மூலமே இரட்சிப்பை பெறலாம் என்று போதிக்கும் திருச்சபையை நாடுங்களஇ

   எபேசியர் 2 : 8, 9

5. கிறிஸ்தவர்களாகிய நீங்கள் வாரம்தோறும் செய்ய வேண்டியது என்ன?

   எபிரேயர் 10 :25



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பூரணத்துவம் பெற்ற திருச்சபை**

ஒரு பூரணமான திருச்சபை எங்கும் இருந்ததில்லை. அதனால் அப்படியொன்றை தேடாதீர்கள். இயேசுவின் பன்னிரண்டு சீஷர்களில் ஒருவன் துரோகி மற்றவர்கள் இயேசுவை கைதி செய்யும் வேளையில் அவரை விட்டு விலகி விட்டனர். திருச்சபை ஒரு நூதனசாலையல்ல , காட்சிக்கு வைக்கப்படும் பரிசுத்தர்களை திருச்சபைளில் காணமுடியாது. திருச்சபை ஒரு வைத்தியசாலை போன்றது. பாவிகள் குணமடைந்து பரிசுத்தத்தை தேடும் இடம் ஒரு பூரணத்துவமடைந்த திருச்சபையை நீங்கள் கண்டடைந்தால் உங்களை பிரவேசிக்க விடமாட்டார்கள். அப்போது அது பூரணத்துவத்தை இழந்து விடும்.

புதிய ஏற்பாட்டின் ஆதி கிறிஸ்தவ சபையில் தன்மைகளை கவனிப்போம்.

வாசிப்பு – அப்போஸ்தலர் 4 : 31 – 33

ஆதித்திருச்சபை எப்படியிருந்ததென தெரிந்து கொள்க.

1. ஜெபிக்கும் சபை
2. பரிசுத்த ஆவியினால் நிறைவு பெற்ற சபை
3. பலமான சாட்சி பகரும் சபை
4. வளர்ச்சியுள்ள சபை
5. ஐக்கியத்தை கடைப்பிடித்த சபை
6. மற்றவர்க்கு பகிர்ந்தளிக்கும் சபை
7. வல்லமை மிக்க சபை
8. கொடுக்கும் சபை

மீண்டும் கூறுகிறேன் " தேவ குடும்பத்தில் சேர உங்களுக்கான அழைப்பு."

..............................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4. உங்கள் புதிய ஜீவியம்

கிறிஸ்தவராக மாறிய ஒருவரின் ஜீவியம் புதிதாக தொடங்குகிறது.

வேதாகமத்தில் இந்த புதிய ஜீவியத்தை ஒரு பாலகனின் பிறப்பிற்கு ஒப்பிடப்பட்டிருக்கிறது. " ........ மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே" என்று பேதுரு எழுதுகிறார்.

(1 பேதுரு 1 : 23)

மீண்டும் " நீங்கள் வளரும்படி புதிதாய் பிறந்த குழந்தைகளை போல திருவசனமாகிய களக்கமில்லாத ஞானப்பாலின் மேல் வாஞ்சையாயிருங்கள்." என்று பேதுரு எழுதுகிறார். (1 பேதுரு 2 : 3)

எனது முதல் பிள்ளை பிறந்த போது எல்லாம் முடிந்து விட்டது என்று அமைதி அடைந்தேன். ஆனால் ஒரு புதிய தொடக்கம் என்று பின்னர் உணர்ந்தேன்.

குழந்தையின் சிரிப்பும், மலலையின் பேச்சையும் யாவரும் விரும்புவர். "அப்பா" என்று அவர்கள் அழைக்கும் போது மிக மகிழ்ச்சியடைந்தேன். ஆனால் 21 வயதான என் புதல்வன் இன்னும் மனவளர்ச்சியில்லாமல் "அப்பா" என்ற சொல்லை மட்டும் சொல்லிக்கொண்டிருந்தால் எங்களுக்கு வானமே இடிந்து விழும். தேவனும் எமது ஆத்மீக வளர்ச்சியை விரும்புகிறார். அவரின் திட்டத்தை நடைமுறை படுத்த நாம் வளர்ச்சியடைய வேண்டும்.

**புதிய எதிர்காலத்தின் தொடக்கம்**

இறைவனை இரட்சகராக ஏற்ற போது நீங்கள் புதிய அத்மீக வாழ்வை தொடங்கியும் புதிய ஆத்மீக பாலகனாயும் திகழ்ந்தீர்கள்.

ஆனால் நாம் பாலகனாக எப்போதும் இருக்க முடியாது. இயேசுவின் ஞானத்திலும் , கிருபையிலும் நாம் வளர வேண்டும். (2 பேதுரு 3:8)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்தவ வாழ்க்கை ஒது துவிச்சக்கர வண்டிக்கு ஒப்பானது , முன்னேயே சென்று கொண்டிராவிட்டால் விழுந்து வீடுவீர்கள். உங்கள் கிறிஸ்தவ ஆத்மீக ஜீவியத்தில் இப்போது நீங்கள் இருக்கிற நிலையில் இருந்து விட்டால் போதும் என்று நினையாதீர்கள். இயேசுவிடம் வந்த உங்கள் அனுபவம் பெரியது. ஆனால் அதைவிட பெரிய காரியங்களை உங்கள் வாழ்வில் அனுபவித்தரிய போகிறீர்கள். தேவன் எமது வாழ்க்கையை விதிவகுத்தரித்திருக்கிறார்.

கிறிஸ்துவின் சாயல் எமது ரூபத்தில் காண தேவன் விரும்புகிறார். "தம்முடைய குமாரன் அநேக சகோதரருக்குள்ளே முதற்பேறானவராயிருக்கும் பொருட்டு , தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார்." (ரோமர் 8 : 29)

இயேசு கிறிஸ்து எமது அளவு கோலாக திகழ்கிறார். நீங்கள் எவ்வளவு நேரம் ஜெபத்தில் தரித்திருக்கிறீர்கள்? எத்தனை கிறிஸ்தவ சபைகளுக்கு போய் கலந்து கொண்டீர்கள்? வேதாகமத்தில் எத்தனை பகுதிகளை வாசித்து மனப்பாடம் செய்திருக்கிறீர்கள்? எத்தனை பேர்களை இயேசுவண்டை கொணடு வந்திருக்கிறீர்கள்? என்றும் வைத்து உங்கள் ஆத்மீக ஜீவியத்தை தேவன் அளக்கமாட்டார். இவையெல்லாம் எமக்கு தேவை ஆனாலட இவை எமது குறிக்கோலாக இருக்கக் கூடாது. நான் மற்றவர்களை போல பிரச்சனைகள் , பாவத்தைக் குறித்து எவ்வாறு செயற்படுகிறேன்? நான் இயேசுவை போல ஆக முயற்சிக்கிறேனா? அப்போது நான் தேவனுடைய பரீட்சையில் தேறுவேன்.

இயேசு சீடர்களை நோக்கி "நீங்கள் என்னை தெரிந்து கொள்ளவில்லை நான் உங்களை தெரிந்துக்கொண்டேன் ...... நீங்கள் போய் கனி கொடுக்கும்படிக்கு ...... நான் உங்களை ஏற்படுத்தினேன்" என்றார். (யோவான் 15 : 16) இந்த கனி என்ன? பரிசுத்த ஆவியின் கனிகள் அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம் என்பவையாகும். இயேசுவிடம் இக்குணங்கள் முழுமையாக காணப்பட்டன. நாமும் இதை அளவு கோலாக வைத்து ஜீவிக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேவன் செயல்படுகிறார்**

ஒரு கிறிஸ்தவன் தன் சொந்த பெலத்தால் தேவ கட்டளைகளை கைக்கொள்ள முடியாது. கிறிஸ்தவனின் மேல் "தேவன் செயலாற்றுகிறார" என்ற ஒரு பலகையை தொங்க விடலாம்.

இந்த கருத்தை நாம் நிச்சயமாக கடைபிடிக்க வேண்டும். பரிசுத்த ஆவியானவரின் மூலம் தேவன் உங்கள் இயல்புகளில் கிரியை செய்கிறார். எமக்கு மேலிருக்கும் பிதாவாகிய தேவனையும் , உலகில் வாழ்ந்த தேவ குமாரனையும் எம் உள்ளே வாசஞ்செய்யும் தேவனாகிய பரிசுத்த ஆவியையும் அறிகிறோம். தேவன் பரலோகத்திலிருந்து எங்களை கிறிஸ்துவின் சாயலை ஏற்க சொல்லவில்லை. அவர் எம்மில் கிரியை செய்கிறார். நாம் அவர் பிள்ளைகளாகிறோம். சேக்ஸ்பியர் "ஹம்லட்" என்ற காவியத்தை எழுதினார். ஆனால் என்னை அதே போல எழுத சொன்னால் எனக்கு இயலாது. "இயேசுவை போல் இரு" என்று என்னிடம் சொன்னால் எனக்கு அது எனக்கு இயலாத காரியம். சேக்ஸ்பியர் என்னுள் வந்தால் , நானும் அவரை போல நாடகங்களை எழுதுவேன். ஆனால் சேக்ஸ்பியருக்கு அது முடியாது. இயேசு கிறிஸ்துவினால் எம்மில் வாசஞ்செய்யமுடியும் , நீங்கள் இயேசுவை இரட்சகராக ஏற்கும் போது அவர் உங்களினுள் கிரியை செய்கிறார்.

இதனால் இயேசுவை போல பிரதியொன்றை நீங்கள் எடுப்பதில்லை. அவரின் பிள்ளையானதால் இயேசுவில் நீங்கள் பங்காலிகள்.
(கலாத்தியர் 2 : 20) தினம் பரிசுத்த ஆவியானவரின் கைக்குள் அடங்க வேண்டும். உங்களை முழுமையாக அர்ப்பணியுங்கள்.

**(1) உங்கள் புதிய வல்லமை - பரிசுத்த ஆவியானவர் உங்களில் கிரியை செய்கிறார்.**

பரிசுத்த ஆவியானவர் உங்கள் வாழ்க்கையில் பிரசன்னம் செய்ததை அறிவது மிக மேலான காரியமாகும்.
வேதாகமம் பரிசுத்த ஆவியாவனர் ஒரு ஆள் என்று கூறுகிறது. நீங்கள் புதிய கிறிஸ்தவ ஜீவியத்தை ஜீவிக்க உங்களினுள் இருக்கும் பரிசுத்த ஆவியாவனவர் உதவி புரிகிறார். (அப்போஸ்தலர் 1 : 8)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிசுத்த ஆவியானவரின் வல்லமையை பெற்ற நபரை இலேசாக இனம் காணலாம்.

1. அவர்கள் சுவிசேஷத்தை பரப்பி தம் விசுவாசத்தை பகிர்ந்து கொள்வர்.
2. தேவ வார்த்தையான வித்தை விதைத்து வேத வாக்கியங்களை கைக்கொள்பவர்கள்.
3. மனிதர், பொருட்கள், இடங்கள் இவற்றில் மாறுதலை காண்பவர்கள்.
4. உலகத்தை தலை கீழாக ஆக்கி, சத்தியத்தை மேற்கொள்கிறவர்கள்.

**பரிசுத்த ஆவியின் வல்லமையை பெறுவதெப்படி?**

1. **பாவத்தை அறிக்கை செய்யவேண்டும்.** (1 யோவான் 1 : 9)

   பாவத்தை அறிந்து நாம் சகலத்தையும் அறிக்கை செய்தல், முடியும் வரை நாம் செய்த பிழைகளை நிவிர்த்தி செய்தல், களவு எடுத்திருந்தால்அதை திருப்பிக் கொடுத்தல்.

2. **உங்களுக்கு தேவையான வல்லமை பரிசுத்தஆவியானவரிடம் கேளுங்கள்.** (எபேசியர் 5 : 18)

3. **நீங்கள் வல்லமை பெற்றிருக்கிறீர்கள்.** (யோவான் 15 : 7)

   உங்கள் உணர்ச்சிகளல்ல விசுவாசத்தை தரியுங்கள். பரிசுத்த ஆவியானவரால் நிறைவு பெறல் எமது ஜீவியகாலம் முடியும் வரை நாம் எதிர்ப்பார்ப்பதொன்றாகும். தினமும் அவரின் நிறைவு தேவை அது வாழ்க்கையின் தொடக்கமல்ல அது ஒரு தொடர்ச்சியான செயல்.

நாம் ஒரு கேள்வியை கேட்போம். எனது இதயத்தை ஆளுபவர் யார்? நானா அல்லது கிறிஸ்துவா?

கிறிஸ்துவின் பிரசன்னத்தை எப்போதும் பெற தினமும் அமைதியான ஜெப நேரத்தை தேடுங்கள். இது உங்களை தேவனோடு தனிமையாக இருக்க உதவும். காலை நேரம் இதற்கு உகந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**(2) உங்கள் ஆன்மீக உணவு தேவ வார்த்தை**

எமக்கு தினமும் எமது உடலை போஷிக்க ஆகாரம் தேவை. அதே போல எமது ஆன்மீக வாழ்வுக்கு தேவ வசனம் வளர்ச்சியை கொடுக்கிறது. முழு வேதாகமமும் தேவனுடைய வார்த்தை அதை தினமும் நாம் வாசித்து உட்கொள்ளல் அவசியம்.

"வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்ய குதியுள்ளவனாகவும், அவைகள் உபதேசத்துக்கும் கடிந்து கொள்ளுவதற்கும் சீர்திருத்துவதற்கும் நீதியை படிப்பிக்குதலுக்கும், பிரயோஜனமுள்ளவைகளாகயிருக்கிறது.

(2 தீமோத்தேயு 3 : 16, 17)

**இவற்றில் நினைவில் கொள்க.**

1. உங்களுக்கு ஏற்ற தெளிவாய் விளங்கக்கூடிய மொழிப்பெயர்ப்பில் ஒரு வேதாகமத்தை சொந்தமாய் வாங்கிக் கொள்ளுங்கள். நீங்கள் அதில் குறிப்புகள் எழுதி கொள்ளலாம்.

2. வேதாகமம் வாசிப்புக்கு ஒரு அமைதியான நேரத்தை வைத்து கொள்ளுங்கள் காப்பி, தேனீர் அருந்தும் இடைவேளையும் இதற்கு உகந்தது.

3. வேதாகமத்தில் ஒரு புத்தகத்தை தேர்ந்து முதலில் அதை நீங்கள் யோவான் அல்லது லூக்கா சுவிசேஷத்தை படிக்கலாம். பின்பு அப்போஸ்தலர் நடபடிகள், பிலிப்பியர் ,ரோமர் இப்படியாக தேர்ந்து வேதாகமத்தை படிக்கலாம். தினமும் வேதாகம பகுதிகளை தேர்ந்து வாசிப்பு மட்டைகளை தயாரிக்கும் நிறுவனங்கள் பல உண்டு. தலைமை ஸ்தாபனத்தில் நீங்கள் இவற்றை பெற்றுக் கொள்ளலாம்.

4. வேதாகம பகுதிகளை வாசிக்கும் போது பல கேளிகளை கேளுங்கள். "தேவனைப் பற்றி நான் இப் பகுதியில் என்ன அறிகிறேன்?" மனிதனைப் பற்றி என்ன கூறுகிறது? எனக்குரிய வாக்குத்தத்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்று உண்டா? எந்த பாவத்தை விட்டு நான் விலகவேண்டும்? எந்த கட்டளையை நான் கைக்கொள்ள வேண்டும்?

5. குறிப்புகளை எழுதி ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். மீற்பார்வை செய்யவும் இது உதவும். சில பகுதிகள் விளங்காவிட்டால் வேதாகமத்தை வீசி விடாதீர்கள்.

6. பென்சில் பேப்பர் எப்போதும் குறிப்பெழுத தயாராய் வைத்திருங்கள்.

**வேத பகுதிகளை படிப்பதற்கான ஒரு சிறந்த முறை**

(அ) – கருத்தை அறிய பகுதியை மீண்டும் மீண்டும் வாசியுங்கள்.

(ஆ) – மீற்பார்வை செய்ய கருத்துக்களை குறித்துக் கொள்ளுங்கள்.

(இ) – தேவன் வேத பகுதிகளின் மூலம் உங்கள் வாழ்வில் செயலாற்ற ஜெபியுங்கள்.

(ஈ) – மற்றவர்களுக்கு இதை கூறுங்கள்.

## (3) ஜெபம் - தேவனுடன் நீங்கள் சஞ்சரித்தல்

**ஜெபத்தின் மூலம் நீங்கள் பலமுள்ள கிறிஸ்தவனாகலாம்.**

"நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாமல் எல்லாவற்றையும் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்கு தெரியப்படுத்துங்கள்" (பிலிப்பியர் 4 : 6) ஜெபம் ஒரு விசித்திரமானதும் மிகவும் நூதனமான செயல் பரிசுத்த ஆவியானவர் தேவ வார்த்தையினூடாக எமக்கு பேசுகிறார். ஜெபம் மூலம் தேவனிடம் நாம் சம்பாஷிக்கிறோம். சுவாசபைக்கு சுவாசம் தேவை அதே போல் எமது ஆத்துமாவிற்கு ஜெபம் தேவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் ஜெபித்து உங்கள் பிரச்சனைகளுக்கு தீர்வுகள் வரும் போது உங்கள் விசுவாசம் பெலப்படும். தேவன் ஜெபம் மூலம் மனிதனூடாக உறவாடுகிறார்.

"என் ஆத்துமா தேவன் மேல், ஜீவனுள்ள தேவன் மேலேயே தாகமாயிருக்கிறது." (சங்கீதம் 42 : 2) சகலருக்கும் தேவனை குறித்து ஆத்தும தாகமுண்டு.

தேவனிடம் நண்பனிடம் கதைப்பது போல பேசுங்கள். தினமும் ஒரு முறை ஜெபிக்காமல் எந்நேரமும் தேவனிடம் சொற்ப நேரம் பேசி பழகி கொள்ளுங்கள். காலை எழும்பும் போதும் ஆகாரம் எடுக்கும் முன்னும் நடக்கும் போதும் காத்திருக்கும் போதும் நித்திரை வராத போதும் ஜெபியுங்கள். தேவனுடைய மகிமைக்கு நீங்கள் வாழ்வதே ஒரு ஜெபமாகும். நாம் கண்களை மூடாமல், முழங்காலிடாமல் ஜெபிக்கலாம்.
தினமும் தேவனின் சத்தத்தை கேட்டு அவர் கூறும் வார்த்தைகளை அறிந்து கொள்ள ஒரு முக்கிய நேரத்தை வைத்துக் கொண்டால் நல்லது. பலர் காலையில் தேவனிடம் ஜெபிக்கிறார்கள். ஆனால் வேலை செய்யும் ஒரு தாய்க்கு பகல் அல்லது இரவு நேரம் ஜெபிக்க சாத்தியமாகவிருக்கும். அப்படியாக எங்கள் அமைதியான நேரத்தில் எமக்கு பெலன் , சமாதானம் , சரியான வழி முதலியனவை தேவனிடமிருந்து பெற்றுக் கொள்கிறோம்.
நீரில் மூழ்கி வேலை செய்பவர்கள் பிராண வாயுவை மேலிருந்து பெற்று தங்கள் குழாய்கள் சரியாதக வேலை செய்கிறதா என்று எப்போதும் கண்ணாய் இருப்பார்கள். ஒரு விசுவாசியும் பரலோகத்திலிருந்து வரும் தொடர்புகளை துண்டிக்க கூடாது. சோதனை நாளாந்த வேளைகளை தொடங்கு முன் நாம் தேவ உறவை சரிதாக்கி கொள்ள வேண்டும்.

**ஜெபத்தை குறித்து நான்கு பிரதான அம்சங்கள்**

**துதி -** தேவனின் மகிமைக்காகவும் , வல்லமைக்காகவும் அவர் அருளிய இயேசு கிறிஸ்துவுக்காகவும் அவரைத் துதித்தல்.

**பாவ அறிக்கை -** பாவ அறிக்கை உண்மையான மனதோடு செய்யவேண்டும். நாம் பாவியானாலும் தேவன் எம்மை நேசிக்கிறார் என்பதை மறந்து விடக்கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நன்றி கூறல் -** தேவன் அருளிய பல நல்ல காரியங்களுக்காகவும் பல சோதனைகளுக்காகவும் அவருக்கு நன்றி கூறல்.

**கேட்டல் -** தேவனிடம் உங்கள் தேவைகளை கேட்டல்இ முதலில் மற்றவர்களுக்காகவும் பின் உங்களுக்கும் கேளுங்கள், உங்கள் நண்பர்கள் , இனத்தார் உங்களுடன் வேலை செய்பவர்கள் பாடசாலை நண்பர் ஆகியோர் இரட்சகரை அறிய வேண்டும் என நீங்கள் நினைத்தால் அவர்களின் பெயர்களை எழுதி ஒரு பட்டியல் தயாரியுங்கள்.

வேதாகமம் வாசிக்கும் போது பரிசுத்த ஆவியானவர் எம்முடன் பேசுகிறார். ஜெப வேலையில் நாம் அவருடன் பேசுகிறோம். எமது அமைதியான நேரத்தில் இருவரும் தொடர்பு கொள்கிறோம்.

ஒரு முனிவரின் வாழ்க்கை இயற்கையானதல்ல. எல்லா மனிதரும் மற்றவர்களின் உறவை நாடுகிறார்கள். எமது இதயம் தேவனை தேடுகிறது. எமது கார் இயந்திரத்தை நீரில் செலுத்த முடியாது அதற்கு பெற்றோல் தேவை. எமது ஆத்துமா தன் இஷ்டத்திற்கு செல்லாது. அதற்கு தேவன் தேவை. சுவாசபைக்கு சுவாசம் அவசியம் என்பது போல எமது ஆத்துமாவிற்கு ஜெபம் தேவை அதனால் ஒரு நேரத்தை தேர்ந்து தேவனோடு கதைகக்க கற்றுக் கொள்ளுங்கள். ஜெபம் , பாஷை இவையெல்லாம் தேவன் கவனியார். எமது இதயம் உண்மையாக அவரை தேட வேண்டும். "தேவன் ஆவியாயிருக்கிறார். அவரை தொழுது கொள்கிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரை தொழுது கொள்ள வேண்டும்." (யோவான் 4 : 24)

......................................


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5. உங்கள் புதிய பொறுப்புக்கள்

**சுவிசேஷ நற்செய்தியை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.**

“நீங்கள் உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தை பிரசங்கியுங்கள்” என்றார் இயேசு (மாற்கு 16 : 15)

நாம் உப்பாகவும் , வெளிச்சமாகவும் இவ்வுலகில் இருக்க வேண்டும் என்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சொன்னார். உப்பு தாகத்தை கொடுக்கும் மற்றவர்கள் எங்கள் மூலம் இயேசுவை அறிய தேவன் இவ்வுப்புத்தன்மையை எமக்கு கொடுக்க வேண்டும். வெளிச்சம் வழி காட்டுகிறது. உங்கள் வெளிச்சம் மனிதர் முன் பிரகாசிக்க வேண்டும். நீங்கள் செய்கின்ற நற்கிரியைகளைக் கண்டு ஜனங்கள் பிதாவை ஸ்தோதரிக்க வேண்டும். (மத்தேயு 5 : 11 – 16)

நாமொருவரும் சுயமாக கிறிஸ்தவ வாழ்க்கை வாழ முடியாது. இயேசுவுக்கு, முழுமையாக ஒப்புக்கொடுத்து அவர் தன் வல்லமையினால் எம் வாழ்வில் செயலாற்றும் போது வலிமை மிக்க கிறிஸ்தவ ஜீவியத்தை நாம் பெறலாம். இதன் மூலம் மனிதர் முன் நல்ல சாட்சிகளாக முடியும்.

உங்கள் கிறிஸ்தவ வாழ்க்கையில் வித்தியாசம் வேண்டும்.

இயேசு கிறிஸ்துவிற்காக சாம் ஜீவிக்கும் போது மக்கள் எம்மில் ஒரு வித்தியாசத்தை காண்பார்கள். அநேகமாக உங்களில் உள்ள வித்தியாசத்தைப் பற்றி பலர் உங்களிடம் சம்பாஷிப்பார்கள். சுவிசேஷத்தை மிக எளிய முறையில் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள். புதிய விசுவாசியான நீங்கள் பல நேரங்களில் இயேசுவைப்பற்றி கூற பின்தங்குவீர்கள். ஆனால் இது உங்களுக்கு தோல்வி என நினையாதீர்கள். கிறிஸ்துவண்டை ஒருவரை வழிநடத்த போதகர் அல்லது முதல்வரை கேட்டு நீங்கள் இதைப்பற்றி அறியலாம்.

எல்லாவற்றிற்கும் மறுமொழி தெரியாதென்று சாட்சி பகிர்வதை நிறுத்தி விடாதீர்கள். எல்லாவற்றிற்கும் விடைகளை தெரிந்தவர் உலகிலே இல்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் இயேசுவை உண்மையாக அறிந்தபடியால் அவரைப் பற்றி கூற தவறாதீர்கள். யாரிடமாவத நீங்கள் ஒரு கிறிஸ்தவ விசுவாசி என்று கூறுங்கள். இப்படியான தருணத்தை இழந்து விடாதீர்கள்.

**இயேசுவிற்காக சாட்சி பகிர்தல்.**

நீங்கள் ஒரு இரகசிய சீஷனாக இருக்க முடியாது. நீங்கள் அப்படியாக செயல் பட்டால் உங்கள் சீஷத்துவம் உங்கள் இரகசியத்தை வெளியாக்கும் அல்லது உங்கள் இரகசியம் உங்கள் சீஷத்துவத்தை அழித்துவிடும். நீங்கள் கர்த்தருக்காக பலரின் மத்தியில் சாட்சியாக நிற்க வேண்டும்.

இயேசுவில் உண்மையாக அன்பு வைத்து அவரை நம்புகிறவர் அவரை பற்றி மற்றவர்களுக்கு கூற தவறமாட்டார்கள். புதிய ஏற்பாட்டில் உள்ள கதைகளை படித்தால் இதன் உண்மை புலப்படும். உதாரணமாக யோவான் சுவிசேஷத்தின் 1ம் அதிகாரத்தில் அந்திரேயா இயேசவுடன் ஒரு நாள் இருந்து பின் தன் சகோதரனான பேதுருவிடம் அவரைப் பற்றி சாட்சி பகருகிறான். (யோவான் 1 : 41, 42) யோவான் 4ம் அதிகாரத்தில் ஒரு நன்னடத்தையற்ற பெண்ணிற்கு ஜீவதண்ணீரைக் கொடுக்கிறார். இந்த பெண் உடனே நகருக்கு ஓடிபோய் அயலவர்களை இயேசுவிடம் கூட்டிவருகிறதைக் காணலாம். (யோவான் 4 : 29) இயேச வரி வசூலிப்பவனான மத்தேயுவை தன் பின்னே வரும்படி அழைத்தார். மத்தேயு தன்னோடிருந்த மற்ற வரிவசூலிப்பவர்களை விருந்துக்கு அழைத்து இயேசுவிற்கு அறிமுகப்படுத்தினான். (லூக்கா 5 : 29) பவுல் தமஸ்கு செல்லும் பாதையில் இயேசுவை சந்தித்து பின் யூத ஜெப ஆலயங்களுக்கு சென்று தான் கடந்த காலத்தில் கிறிஸ்தவர்களை துன்புறுத்தியது பிழையென்றும் இயேசுவே மேசியா என்றும் போதித்தான்.

(அப்போஸ்தலர் 9 : 20)

**நீங்கள் உங்கள் விசுவாசத்தை பகிர்ந்து கொள்வதற்கு காரணம்**

ஆதி திருச்சபையின் முதல் கிறிஸ்தவர்கள் இரண்டு காரணங்களுக்காக சாட்சி பகிர்ந்தனர். முதலாதவாக இயேசு நமக்கு இட்ட கட்டளைக்கு கீழ்ப்படிந்தனர். இயேசு சில மீனவரிடம் என் பின்னே வாருங்கள் நான் உங்களை மனுஷரை பிடிக்கிறவர்களாக்குவேன் என்றார்.

(மாற்கு 1 : 17) இயேசுவை பின்பற்றுவதோடு மற்றவர்களை அவரை பின்பற்ற கூறுவது தான் இதன் கருத்து.

இரண்டாவதாக ஆதி கிறிஸ்தவ விசுவாசிகள் கிறிஸ்துவுடன் ஒருமனப்பட்டு மிக நெருக்கமான ஒரு உணர்வை அவருடன் வைத்திருந்தனர். இயேசு "நீங்கள் எனக்கு சாட்சிகளாயிருப்பீர்கள்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அப்போஸ்தலர் 1 : 8) என்று கூறாவிட்டாலும் அவர்கள் சாட்சி பகரதவறி இருக்கமாட்டார்கள். அப்போஸ்தலர் 4ம் அதிகாரத்தில் யூத தலைவர்கள் பேதுருவையும் யோவானையும் இயேசுவை குறித்து பேச கூடாது என்றனர். அதற்கு இவ்விரு சீஷரின் பதில் என்ன?

"நாங்கள் பார்த்ததையும் கேட்டதையும் சொல்லாமல் இருக்க முடியாது" என்றனர். (அப்போஸ்தலர் 4 : 20) தேவன் அவர்களை மேற்கொண்டார். சீஷர் தேவனுடைய வல்லமையினால் நிறைந்திருந்தனர்.

நீங்கள் இயேசுவுக்காக சாட்சி பகர்வது உங்கள் கடமை. நீங்கள் இன்னொருவருக்கு இயேசுவைப் பற்றி கூறும் போது உங்களில் உள்ள விசுவாசம் பெலனடையும். நான் மற்றவர்களுக்கு இயேசுவிற்காக சாட்சி பகரும் போது என் வாழ்க்கை நலமாகிறதை நான் கண்டிருக்கிறேன். நம் சுவாசபைகள் காற்றினை உட்கொண்டு பின் வெளியிடுகிறது. அதே போல் நாம் தேவ ஆசீர்வாதத்தை பெற்று மற்றவாக்கு அதை கொடுத்துவிட வேண்டும்.

மதுவை அருந்தலை தடுக்கும் சங்கத்தினர் ஒருவர் மதுவினால் விலக்கப்பட்டு வெற்றி பெற்றால் அவன் இன்னொரு குடியில் சிக்கியவனுக்கு தன் அனுபவத்தைக் கூறி அவனை பெலப்படுத்த வேண்டும். இதே வழியை கிறிஸ்தவர்களும் பின்பற்றவேண்டும். "நான் இரட்சிக்கப்படுவதற்கு என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டால் மட்டும் போதாது "இரட்சிப்பு எனக்குண்டு நான் இப்போது மற்றவர்களுக்கு என்ன செய்ய கூடும்" என்று கேட்க வேண்டும்.

**செய்தியை கேட்க மக்கள் உண்டு அதனால் நாம் நற்செய்தியை கூற வேண்டும்.**

சாட்சி பகரும் போது நீங்களும் மற்றவர்களும் நலமடைகிறீர்கள். உங்களிடம் வேறோருவர் கிறிஸ்தவைப் பற்றி சொன்னதனால் தான் நீங்கள் கிறிஸ்துவிற்கு அறிமுகமானீர்கள். மலை பிரசங்கத்தில் இயேசு இவ்வாறு கூறினார். "நீங்கள் உலகிற்கு உப்பாய் இருக்கிறீர்கள்." (மத்தேயு 5 : 13) விசுவாசிகளாகிய நாம் மற்றவர்களின் வாழ்க்கை அழியும் போது அதற்கு உயிர் கொடுக்க வேண்டும். அவர்களின் வாழ்க்கையில் கசப்பு ஏற்படும் போது ருசியை கொடுக்க முன் வரவேண்டும். உப்பை போத்தலில் மட்டும் வைத்தால் அதற்கு ஒன்றும் செய்ய முடியாது. உப்பு உணவில் கலந்தால் மட்டுமே ருசியைத் தரும்.

கிறிஸ்தவராகிய நாம் நம்மை சுற்றியுள்ள கிறிஸ்தவருடன் மட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பட்டு எம்மை தனிமையாக்கிக் கொள்கிறோம். உலகில் உள்ள கிறிஸ்தவரல்லாத ஜனத்தைப் பற்றி கவலைப்படுவதில்லை. நீங்கள் உங்கள் திருச்சபையில் பெற்ற தேவ வல்லமையை அன்றாட நீங்கள் சந்திப்பவர்களுக்காக உபயோகியுங்கள்.

## பாருங்கள் , கேளுங்கள் , பகிருங்கள்

இம்மூன்று வார்த்தைகளும் கிறிஸ்துவிற்கு சாட்சி பகர நமக்கு உதவும்.

### 1. முதலாவதாக உங்களைச் சுற்றிப் பாருங்கள்

பத்தாயிரம் மையல்களுக்கு அப்பால் இருக்கும் ஒருவரை நீங்கள் தேடி போக தேவையில்லை. இயேசு மனிதரை தேடி வெகு தூரம் செல்லவில்லை. அநேகமாக தான் இருக்கும் இடத்திலேயே ஒருவரை சந்தித்தார். உங்களை சுற்றியும் பலர் இருக்கின்றனர். கடைக்காரன் , உங்களுடன் பிரயாணம் செய்பவர் , அயலவர் , உங்களோடு வேலை செய்பவர் இவர்கள் நித்திய ஜீவனைக் குறித்து தாகம் உடையவர்களாய் காணப்படமாட்டார்கள். ஆனாலும் அவர்கள் பசியாயிருக்கிறார்கள். இந்த நித்திய ஜீவனை தேவனாலே மட்டும் கொடுக்க முடியும்.

### 2. அவர்கள் கூறுவதைக் கேளுங்கள்

இன்றைய நவீன உலகில் எல்லாரும் தங்கள் மேல் அன்பு கொள்ளும் ஒருவனையோ அல்லது நம்பிக்கை வைக்க ஒருவரையோ நாடி நிற்கின்றனர். இயேசு பாவிகளின் நண்பராயிருந்தார். அவர் மனிதனி பாவ செயல்களில் ஈடுபடவில்லை. ஆனால் எப்போதும் அவர்களுக்கு துணையாய் இருந்தார். எல்லாரும் அவரை நாடி சென்றனர். கிறிஸ்தவரல்லாதவரோடு நட்பு கொள்ளுங்கள். அவர்களுக்கு உதவுங்கள். அவர்கள் கூறுவதை புறக்கணிக்காது கேளுங்கள். அவர்கிளன் பேச்சின் அடிப்படை நோக்கங்களை அறியுங்கள். நாம் பிறரின் பேச்சை கேட்கும் போது அவன் தன் உள்ளத்தை எம்மிடம் திறக்கிறான். ஒரு சில்லை சுழலுவதுபோல அவனது ஆத்துமாவில் உள்ள சிதறிய அவன் வாழ்க்கை அவன் பேச்சில் வெளிவரும். அந்நேரத்தில் அவனுக்கு இயேசுவை பற்றிக் கூறலாம்.

### 3. மற்றவர்களுடன் பகிருங்கள்

உங்கள் வாழ்க்கையில் இயேசு செய்த அற்புதத்தை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள பல தருணங்கள் ஏற்படும். அந்நேரம் எளிய முறையில் கர்வமற்ற குரலில் அவர்களுக்கு உங்கள் இரட்சிப்பை பற்றி கூறுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில வேளைகளில் தேநீர் , காப்பி ஒருவருடன் இணைந்து அருந்தும் போது இத்தகைய சந்தர்ப்பம் ஏற்படலாம். கிறிஸ்தவ திருச்சபைக்கு நண்பர்களை அழைத்து சென்று அல்லது புத்தகங்களை கொடுத்தும் அவர்களுக்கு நற்செய்தியை விளக்கலாம்.

உங்களுக்கு எல்லாவற்றிற்கும் மறுமொழி இல்லை என்பதனால் சாட்சி பகராமல் இருக்க வேண்டாம். எவருக்குமே எல்லாம் தெரியாது. அதை நாம் உணர வேண்டும். ஆனால் இயேசு இன்றும் என்றும் ஜீவிக்கிறார் எனற சத்தியத்தை நாம் உணருகிறோம். அதற்கு சாட்சிகளாக இருக்கிறோம். சாட்சி பகர்வது ஒரு செயற்பாடல்ல வாழ்க்கை விதி முறைகளில் ஒன்றாகும். கிறிஸ்தவர்கள் சாட்சி பகர்வதை பார்க்கிலும் சாட்சிகளாக இருக்க வேண்டும்.

## சாரம்சம்

கேட்டவைகளையும் , பார்த்தவைகளையும் குறித்து கிறிஸ்தவர்களுக்கு சாட்சி பகர்வது தேவனின் கட்டளையாகும். (யோவான் 1 : 3) எந்நேரமும் நாம் சாட்சிகளாக இருக்கிறோம். மற்றவர்களை நேசிக்கும் போது தேவ அன்பை அவர்களிடம் பகருகிறோம். எமது வாழ்க்கையின் மூலம் சாட்சி பகரலாம். நாம் செய்யும் காரியங்கள் மட்டுமல்ல எமது பேச்சிலும் இயேசுவை மற்றவர்க்கு அறிமுகப்படுத்த வேண்டும். உங்கள் வாழ்வில் தேவன் அருளிய கிருபையை மற்றவருக்கு கூறுங்கள். எங்களுடைய பாவங்களை நாங்கள் அறிக்கையிட்டோமானாலட எமக்கும் தேவனுக்கும் இருக்கும் தொடர்பை சரியாகவைத்துக் கொள்ளலாம். நாங்கள் பகிரும் சாட்சி மூலமாக தேவன் எமது வாழ்க்கையில் எவ்வாறு கிரியை செய்திருக்கிறார் என்பதைக் காணலாம்.

நீங்கள் இயேசு கிறிஸ்துவை பின்பற்றும் போது தேவன் உங்களை ஆசீவதிப்பார். அத்தோடு நாம் இவ்வாறு கூறுவோம்.

**“தேவனுடைய நித்திய குடும்பத்தில் சேர வரவேற்கின்றோம்.”**

கடைசியாக, இயேசு கிறிஸ்துவை நீங்கள் எவ்வாறு அறிந்து கொண்டீர்கள் என்பதை எங்களுக்கு தெரியப்படுத்தவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

BILL NEWMAN
MINISTRIES

© 1996 Bill Newman
"Welcome to the Family" and "Living in the Family"
combined© 2005
All Rights Reserved

ISBN 1 875121 26 9

14, Deal Place A,
Colombo 03,
Sri Lanka.
Tel: +94 777 795 251

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









## தேவ போதகர் பில் நியூமன்....

- இவர் அவுஸ்துரேலியா நாட்டிலே திறமையான பேச்சாளர் இவர் உலகம் முழுவதும் அவுஸ்திரேலியாவிலும் நடந்த எத்தனையோ கூட்டங்கள் மூலமாக எத்தனையோ ஆயிரம் பேர்கள் மத்தியில் பணிவிடை கொடுத்துள்ளார்.

- இவர் மனிதர்களுடைய அனைத்து தேவை களையும் புரிந்துணர்கின்றவர். இவர் தனியாகவும், குடும்பமாகவும், சமுதாயமாகவும் அனைவரினதும் தேவைகளை அறிந்திருக்கிறார். இவர் மிகவும் மனஉருக்கத்துடனும், கருணையாகவும் பேசுவார். அதுவே அவரது குறிக்கோளாகும்.
இவரால் முடியும் எல்லா வயதடிப்படையிலும், மனிதர்களையும் சம்பந்தப்படுத்துவதற்கு, இவரது பணிவிடைகளின் மூலமாக அவர்களுக்கு அதிக நம்பிக்கை ஏற்படுகின்றது.

- இவரது பணிவிடைகளை அவுஸ்துரேலியாவிலே நூறுக்கு மேலாக வானொலி நிகழ்ச்சிகளில் கேட்டிருப்பீர்கள். அதே போல விசேஷ தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுக்கூடாக உலகத்தில் பல சம்பந்தங்களை ஏற்படுத்தி பல தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளார். அத்தோடு அனுதினமும் "Power For Living" என்ற நிகழ்ச்சியும் செல்கின்றது. நிறைய புத்தகங்களை சொந்தமாக எழுதியுள்ளார். அதே போல அவுஸ்துரேலியாவின் செய்தி தாள்களிலும் அடிக்கடி இவரது பணி விடைகள் வெளிவருகின்றன.

இவர் மற்றைய தலைவர்களோடு சேர்ந்து வேலை செய்கின்றபடியினால் இவர் மிகவும் உயர்ந்த கௌரவத்திற்குட்பட்ட தேசிய தலைவராவார். இவர் பிரதமமந்திரி மூலமாகவும், அரசாங்க தலைவர்கள், நகர அதிகாரிகள் மூலமாகவும் அவரது அர்ப்பணிப்பான வேலைக்காக கௌரவிக்கப்பட்டுள்ளார். இவர் குடும்பஸ்தர். பில் நியுமன் அவரது மனைவி பொதி. இரண்டு பிள்ளைகள் பீன்னும், ஹூக்கும் குடும்பமாக குயின்ஸ் லேண்ட், அவுஸ்துரேலியாவில் வசிக்கின்றனர்.

**BILL NEWMAN**
**MINISTRIES**

14, Deal Place A,
Colombo 03,
Sri Lanka.
Tel: +94 777 795 251



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org